**செய்தி வெளியீடு எண்: 1041** **நாள்: 26.11.2010**

# பத்திரிக்கை செய்தி

"வேலைவாய்ப்பு அலுவலர்களின் குளறுபடியால் ஆசிரியர் நியமனத்தில் அருந்ததியினருக்கான 3 சதவீத உள் ஒதுக்கீடு முழுவதுமாக அமுலாகாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகப் பட்டதாரி ஆசிரியர்கள் தெரிவித்துள்ள புகாருக்கு மறுப்புரை தெரிவிக்கப்படுகிறது. அருந்ததியினருக்காக தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ள 3 சதவீத இட ஒதுக்கீட்டினைச் செயல்படுத்துவதில் எந்த விதக் குளறுபடியும் இல்லை. இந்த இட ஒதுக்கீட்டினை அமுல்படுத்திட வேலைவாய்ப்புத் துறையும் ஆசிரியர் தேர்வு வாரியமும் இணைந்து செயல்பட்டு வருகிறது.

வேலைவாய்ப்பு அலுவலக உயிர்ப்பதிவேட்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பொதுப் பிரிவு என்று வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனால் "தாழ்த்தப்பட்ட வகுப்பு", என்ற பிரிவில் "அருந்ததியினர்" எனத் தனிப்பதிவு ஏதும் மேற்கொள்ளப்பட்டு பராமரிக்கப்படவில்லை. தற்போது, "அருந்ததியினர்" பிரிவுக்கு தமிழக அரசு 3 சதவீத உள் ஒதுக்கீடு அளித்த பின் அதைச் செயல்படுத்து முகமாக இத்துறையினால் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி தாழ்த்தப்பட்ட அருந்ததியினப் பிரிவினர், தாங்கள் "அருந்ததியினர்" என்பதை உறுதி செய்யும் சான்றிதழை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அளித்து அச்சான்றிதழினை 31/08/2010-க்குள் பதிவு செய்ய வேண்டும் என நாளிதழ்களில் செய்தி வெளியிடப்பட்டது. தவிர, வேலைவாய்ப்பு அலுவலக அறிவிப்புப் பலகையிலும் மேற்காணும் செய்தி வெளியிடப்பட்டது. இத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்குப் பின், 31/08/2010 என்ற நாளினை அடிப்படையாகக் கொண்டு, பட்டதாரி ஆசிரியர் பணிக்கு "அருந்ததியினர்" பிரிவுக்கெனத் தனிப்பட்டியல் தயாரிக்கப்பட்டு அப்பட்டியல் 27/09/2010-ல் ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு அளிக்கப்பட்டது. "அருந்ததியினர்" என்பதற்கான ஆதாரத்தினை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 31/08/2010-க்குள் அளித்துப் பதிவு செய்தவர்களின் பெயர்கள் மட்டுமே தனிப்பட்டியலாகத் தயாரிக்கப்பட்டு ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு அனுப்பப்பட்டன. 31/08/2010-க்குள் பதிவு செய்யாதவர்களின் பெயர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு அனுப்பப்படவில்லை. இருப்பினும், 31/08/2010-க்கும் பின்னர் "அருந்ததியினர்" எனப் பதிவு செய்தவர்களின் விவரங்களும் தற்போது தொகுக்கப்பட்டு அவர்கள் பதிவு மூப்புக்கு உட்பட்டிருப்பின் கூடுதல் பட்டியலாக ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் எனவே, வேலைவாய்ப்பு துறையில் குளறுபடி ஏதும் நடைபெறவில்லை என்றும், அருந்ததியினருக்கான இட ஒதுக்கீடு அமலாவதில் எந்த விதப் பாதிப்பும் இல்லை என்றும் தெரிவிக்க விரும்புவதுடன் வேலைவாய்ப்பு துறையும் ஆசிரியர் தேர்வு வாரியமும் அருந்ததியினருக்கான இட ஒதுக்கீட்டினைச் செயல்படுத்த இணைந்து செயல்பட்டு வருகிறது.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
இயக்குநருக்காக.

**வெளியீடு:– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**